ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2164/23 - 2020 පෙබරවාරි මස 26 වැනි බදාදා - 2020.02.26
**2164/23 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

***2020 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : 4-3/7/2019/எச்டபிள்யு/253.
பி. செ. குறிப்பு இல. : ව/ප්‍රාලේ/1/3/4/2019/06.

*காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் சமரக்கோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

எஸ். எம். சந்திரசேன.
காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர்,

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, பெப்புருவரி 19.

*அட்டவணை*

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், வத்தளை.

2. **காணியின் விபரம்** : மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 177, மத்துமகல கிராம அலுவலர் பிரிவில், மத்துமகல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2019.12.16 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. GA/DSO/2019/644 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'A' – ஜாவாகே கொட்டுவ – விஸ்தீரணம்: 0.0566 ஹெக்டயார்**

வடக்கு: உரிமை கோருபவர் மற்றும் பெயர் கண்டுபிடிக்க முடியாத காணி ; கிழக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் வீதி (வீ.அ. அ.); தெற்கு: வீதி (வீ.அ. அ.) ; மேற்கு: உரிமை கோருபவர் மற்றும் பெயர் கண்டுபிடிக்க முடியாத காணி.

02. **துண்டு 'B' – ஜாவாகே கொட்டுவ – விஸ்தீரணம்: 0.0768 ஹெக்டயார்**

வடக்கு: வீதி (வீ.அ.அ.) மற்றும் துண்டு C ; கிழக்கு : துண்டு C ; தெற்கு: துண்டு C ; மேற்கு: துண்டு C, எம். பீ. குருகே உரிமை கோரும் முத்துராஜவெல, இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் வீதி (வீ.அ. அ.).

03. **துண்டு 'C' – முத்துராஜவெல – விஸ்தீரணம்: 0.5954 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு B மற்றும் வீதி (வீ.அ.அ.) ; கிழக்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு: அதிவேக நெடுஞ்சாலை சுற்றுவட்டப்பாதை, துண்டு D, என். டீ. கே. ரணசிங்க உரிமை கோரும் இதிகஹ துடுவே கும்புர மற்றும் இந்த காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கு: துண்டு D, என். டீ. கே. ரணசிங்க உரிமை கோரும் இதிகஹ துடுவே கும்புர, இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் துண்டு A.

04. **துண்டு 'D' – இதிகஹ துடுவே கும்புர – விஸ்தீரணம்: 0.1168 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு C ; கிழக்கு : துண்டு C ; தெற்கு: அதிவேக நெடுஞ்சாலை சுற்றுவட்டப்பாதை மற்றும் இந்த காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கு: இந்த காணியின் எஞ்சிய பகுதி மற்றும் எம். பீ. குருகே உரிமை கோரும் முத்துராஜவெல.

*03 - 425*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.